## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 242/2018 | Date : 07.01.2025 | PW 2 |
|---|---|---|
| Name: பிர்லா | த/பெ. சின்னதுரை | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இவ்வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல்செய்துள்ளேன் என்றால் நாங்கள் வாங்கிய சொத்து எங்களுக்கு சொந்தமானது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். பழனியம்மாள் எப்போது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் 2018 ம் வருடத்தில் தாக்கல் செய்தார். எனது தகப்பனார் பெயர் சின்னதுரை எனக்கு தற்போது 34 வயதாகிறது. நான் 1990 ம் வருடத்தில் பிறந்தேன். என் தாத்தா பெயர் மாரியப்பன். எனது தாத்தாவின் பெரியப்பா மகன் கிருஷ்ணன் என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ணனுக்கு லட்சுமி மற்றும் பழனியம்மாள் ஆகிய இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். லட்சுமி இறந்த பிறகு பழனியம்மாளை கிருஷ்ணன் திருமணம் செய்து கொண்டார் என்றால் இருக்கலாம். பழனியம்மாளின் மகள் கிருஷ்ணவேணி இவ்வழக்கில் இரண்டாவது பிரதிவாதி என்றால் சரிதான். ராஜேந்திரன், பழனியம்மாள், கிருஷ்ணவேணி ஆகியோர் கிருஷ்ணனின் வாரிசுகள் என்றால் சரிதான். கடந்த 2004 ம் வருடத்தில் இவ்வழக்கின் 1 ஆம் பிரதிவாதியான பழனியம்மாள் அசல் வழக்கு எண்.39/2004 என்ற வழக்கை எனக்கு எதிராகவும் எனது தாத்தா மாரியப்பன் மற்றும் பலர் மீது கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் கிருஷ்ணன் வகையறாவிடம் இருந்து வாங்கிய மேற்படி வழக்கின் சொத்தை பொறுத்து தீர்ப்பாக கூடாது என்று அதற்கு முன்பாகவே தாங்கள் கிரயம் பெற்றுவிட்டதாக கூறி அசல் ஆவணங்களை எங்கள் தரப்பில் மாரியப்பன் தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் ஆவணங்களை ஆராய்ந்து பிறகு தான் மேற்படி சொத்துக்களில் பாகம் உள்ளது என்று பழனியம்மாளுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து சேலம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் AS 15/2006 என்ற மேல்முறையீட்டை என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மேல்முறையீட்டில் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு உறுதிபடுத்தப்பட்டு மேல்முறையீடு 10.07.2006 ம் தேதி தள்ளுபடி ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மேல் முறையீட்டில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண்.39/2004 வழக்கில் ஏற்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை கோரி பழனியம்மாள் IA 55/2008 மனு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனு

அனுமதிக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை நீதிமன்ற ஆணையர் 3 நாட்கள் அளவீடு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 2008ம் வருடத்திலேயே எனக்கு 18 வயது நிறைவடைந்து விட்டது என்றால் சரிதான். 29.11.2013யில் மேற்படி வழக்கில் பழனியம்மாளுக்கு ஆதரவாக இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் காலம் கடந்து 2018ம் வருடத்தில் தான் மேற்படி வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு தெரியும் என்று இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் பழனியம்மாளின் பாக சொத்தை அவருக்கு தனித்த சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி இதே நீதிமன்றத்தில் பழனியம்மாள் E.P.50/2022 என்ற நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியும். பழனியம்மாளுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் சொத்தில் தனிப்பட்ட பாக சுவாதீனம் ஒப்படைக்க கூடாது என்ற நோக்கத்தோடு நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/–பிர்லா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.